ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2134/50 - 2019 අගෝස්තු මස 02 වැනි සිකුරාදා - 2019.08.02
*2134/50 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I)- பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**1928 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க தாவரவியல் பூங்காக்கள் கட்டளைச் சட்டம்**

1973 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தியமைக்கப்பட்ட 1928 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க தாவரவியல் பூங்காக்கள் கட்டளைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் (இ) பகுதியின் பிரகாரம் சுற்றுலா அபிவிருத்தி, வன சீவராசிகள் மற்றும் கிறித்தவ சமய அலுவல்கள் அமைச்சர் அவர்களால் விடுக்கப்படும் கட்டளை.

ஜோன் அமரதுங்க,
சுற்றுலாஅபிவிருத்தி, வன சீவராசிகள் மற்றும்
கிறித்தவ சமய அலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
2019, யூன் 06.

**கட்டளைகள்**

1. இக்கட்டளைச் சட்டம் 2019 ஆம் ஆண்டின் தாவரவியல் பூங்காக்கள் (நுழைவுக் கட்டணங்கள்) கட்டளைகள் என அழைக்கப்படுவதோடு 2019 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 05 ஆந் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும்.

2. யாதாயினுமொரு தாவரவியல் பூங்காவிற்கு நபர்கள் மற்றும் வாகனங்கள் உள் நுழையும் போது அறவிடப்பட வேண்டிய கட்டணங்களின் அளவுகள் இங்கு அட்டவணையில் குறிப்பாக காட்டப்பட்டுள்ளபடி அமைதல் வேண்டும்.

1 A - G 30652 - 67 (2019/ 08)
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

இருப்பினும் கீழே குறிக்கப்படும் நபர்கள் அவ்வாறு குறிப்பாகக் காட்டப்பட்டுள்ள கட்டணங்களை செலுத்துவதில் இருந்து விலக்குப் பெறுவர்:

(அ) இலங்கை குடியரசின் அதிதிகள்;

(ஆ) தாவரவியல் பூங்காக்களினுள் அமைந்துள்ள வீடுகளில் வசிப்போர்;

(இ) உத்தியோகபூர்வ பணிகளுக்காக தாவரவியல் பூங்காக்களினுள் நுழையும் அரசாங்க அதிகாரிகள்;

(ஈ) தேசிய தாவரவியல் பூங்காக்கள் பணிப்பாளர் நாயகத்தினால் கட்டணம் விலக்களிக்கப்படுகின்ற வேறு யாரேனும் நபர்.

அவ்வாறே மேலும் வாகனங்கள் உள் நுழைய அனுமதிக்கப்படாத தாவரவியல் பூங்காக்கள் தொடர்பில் அத் தாவரவியல் பூங்காக்கள் பொறுப்பாளர்களால் அனுமதிக்கப்படுகின்ற வாகனங்கள் தவிர்ந்த எந்தவொரு வாகனத்திற்கும் அத் தாவரவியல் பூங்காக்களினுள் உட்பிரவேசிக்க அனுமதி வழங்கப்படமாட்டாது.

3. 2010.12.22 ஆந் திகதிய 1685/17 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட, 2011.04.06 ஆந் திகதிய 1700/10 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியினால் திருத்தியமைக்கப்பட்ட மற்றும் 2016.05.27 ஆந் திகதிய 1969 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியினால் திருத்தியமைக்கப்பட்ட தாவரவியல் பூங்காக்கள் உட்பிரவேசிப்பதற்கான கட்டளைகள் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன.

## அட்டவணை

**01. நுழைவுக் கட்டணம் :-நபர்கள் (ஒரு நபருக்கு)**

*(அ) இலங்கையர்களுக்கு :-*

| | |
|---|---|
| 1 வளர்ந்தோர் (60 வயதுவரை) மற்றும் 12 வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகளுக்கு | ரூ. 100.00 |
| 2. 12 வயதுக்குக் குறைந்த பிள்ளைகள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு | ரூ. 20.00 |
| 3. 60 வயதுக்கு மேற்பட்ட சிரேஷ்ட பிரஜைகளுக்கு (அடையாள அட்டையைக் காண்பித்தல் வேண்டும்) | ரூ. 20.00 |

*(ஆ) வெளிநாட்டவர்களுக்கு :-*

| | |
|---|---|
| 1. வளர்ந்தோர் மற்றும் 12 வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகளுக்கு | ரூ. 2,000.00 |
| 2. 12 வயதுக்குக் குறைந்த பிள்ளைகளுக்கு | ரூ. 1,000.00 |
| 3. பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு (அதனை உறுதிப்படுத்த அடையாள அட்டை அல்லது ஏற்கத்தக்க ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.) | ரூ. 1,200.00 |

**02. வாகன நுழைவுக் கட்டணம் (ஒரு வாகனத்திற்கு)**

| | |
|---|---|
| 1. கார், ஜீப், ஸ்டேசன் வான் மற்றும் முச்சக்கரவண்டி | ரூ. 250.00 |
| 2. மோட்டார் சைக்கிள் மற்றும் மோட்டார் ஸ்கூட்டர் | ரூ. 100.00 |
| 3. மிதிவண்டி | ரூ. 50.00 |

**03. கம்பஹா தாவரவியல் பூங்கா மற்றும் சீதாவக்க ஈர வலய தாவரவியல் பூங்கா ஆகியவற்றில் தோணிச் சவாரிசெய்ய.**

| | |
|---|---|
| 1. இருவர் ஒரு தடவை சவாரி செய்ய, அதிக பட்சமாக 1/2 மணித்தியாலம் | ரூ. 300.00 |

**04. பற்றறிக் கார்களுக்கான கட்டணம்**

| | |
|---|---|
| 1. 08 ஆசனங்களைக் கொண்ட பற்றறிக் கார்களுக்கு | ரூ. 2,000.00 |
| 2. 03 ஆசனங்களைக் கொண்ட பற்றறிக் கார்களுக்கு | ரூ. 1,000.00 |

08 - 612

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.*